6

# டால்பின்®

உன்னால் முடியும்

புதிய பதிப்பு

# தமிழ்

பருவம்
1, 2 & 3



100
100
உறுதி

**அரசு புதிய பாடத்திட்டத்தின் படி விடைக் குறிப்பு**
**அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்**

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

## ஆர்டர்களுக்கு மாவட்ட வாரியாக எங்கள் நிர்வாக எண்களை தொடர்பு கொள்ளவும்.

| மாவட்டம் | எண் |
|---|---|
| அரியலூர், செங்கல்பட்டு, சென்னை, கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு | 98653 06197 |
| கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கன்னியாகுமரி | 89256 77710 |
| நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை | 99435 67646 |
| இராமநாதபுரம், ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தென்காசி | 99435 67646 |
| தஞ்சாவூர், தேனி, திருவள்ளூர், திருவாரூர், தூத்துக்குடி, திருச்சி, திருநெல்வேலி | 93453 14146 |
| திருப்பத்தூர், திருப்பூர், திருவண்ணாமலை, நீலகிரி, வேலூர், விழுப்புரம், விருதுநகர் | 93453 30937 |

எங்களது ஒரே நிறுவனம் டால்பின் பப்ளிகேசன்ஸ் மட்டுமே. எங்களுக்கு வேறு இணை நிறுவனங்கள் எதுவும் கிடையாது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# டால்பின்®

# உன்னால் முடியும்

# தமிழ்

புதிய பதிப்பு

# 6

**அரசு புதிய பாடத்திட்டத்தின் படி**
**விடைக் குறிப்பு அடிப்படையில்**
**தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்**


98653 06197 | 89256 77710 | 99435 67646

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com



© All Copyrights reserved


விலை : ரூ.135

# பதிப்புரை

அன்னைத் தமிழை விளைந்து கற்கும் மாணவச் செல்வங்களுக்கு அன்பு வணக்கம். புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட பாடநூலுக்கு ஏற்றபடி உருவாக்கப்பட்டுள்ள இவ்வழிகாட்டியை உங்கள் கைகளில் தவழ விடுவதில் பெருமகிழ்வு அடைகிறோம்.

தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை மாணவர்களின் அடைவைச் சோதிக்கும் வகையில் கற்றல் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு வினாத்தாள்கள் வடிவமைத்து ஒவ்வொரு தேர்விலும் கேட்கப்பட்டு வருகிறது. இச்சவாலை எதிர்கொள்ள ஏதுவாக இக்கையேட்டில் மீத்திற மாணவர் முழு மதிப்பெண் பெறும் விதமாகவும் மெதுவாகக் கற்போர் எளிமையாக விடையளிக்கும் வண்ணமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு, கற்பவை கற்றபின், ஒரு மதிப்பெண் வினா - விடைகள், குறுவினா, சிறுவினா மற்றும் சிந்தனை வினாக்களுக்கான விடைகள் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இலக்கண வினா - விடைகள் மொழிப்பயிற்சிக்கான விடைகளோடு கூடுதல் வினா - விடைகளும் மாணவர் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறும் வகையில் சிறப்பான ஆசிரியர் குழுவைக் கொண்டு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சுயமாக எழுதும் விடைகள் எனத் தரமான தயாரிப்பாக உங்கள் மனம் விரும்பிப் படிக்கும் எழுத்து வடிவத்தில் இக்கையேடு உங்கள் ஆசிரியர்களின் பரிந்துரையோடு உங்கள் தமிழறிவை வளர்க்க வந்துள்ளது. இதனைப் பயன்படுத்தி சான்றோனாவதற்கு மேலான முயற்சிகளை மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

> **“மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
> **மன்னனின் கற்றோன் சிறப்புடையன்”**
>
> \- மூதுரை

**பாராட்டுகளுடன்**
**டால்பின் பதிப்பகத்தார்**

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி பெற்றுக்கொள்ளலாம்.

### புத்தகங்களைப் பெற

| | |
|---|---|
| அலைபேசி எண் (Mobile No) | : **9865306197 / 8925677710 / 9943567646** |
| கட்செவி எண் (Whatsapp No) | : **9345314146** |
| குறுஞ்செய்தி (Sms) | : **9345330937** |
| வலைதளம் (Website) | : **www.kalvidolphin.com** |
| மின்னஞ்சல் (E-mail ID) | : **dolphin.pub2005@gmail.com** |

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கி கணக்கு விவரங்கள்

### ICICI BANK

A/C No : 446005500030

IFSC CODE : ICIC0004460

BRANCH : Srivilliputtur

### CITY UNION BANK

A/C No : 328109000204092

IFSC CODE : CIUB0000328

BRANCH : Srivilliputtur

### TAMILNADU MERCANTILE BANK

A/C No : 328150310875103

IFSC CODE : TMBL0000328

BRANCH : Srivilliputtur

### KARUR VYSYA BANK

A/C No : 1804135000006000

IFSC CODE : KVBL0001804

BRANCH : Srivilliputtur

Merchant Name : DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362

Steps to Pay UPI QR Code
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

G Pay **94427 17794**
**63743 17883**

**✷ பணம் / G-PAY செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**

# பருவம் - 1

## பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | 2 |
| 1. | மொழி | | தமிழ்த்தேன் | 3 |
| | | கவிதைப்பேழை | இன்பத்தமிழ் ✸ | 4 |
| | | | தமிழ்க்கும்மி | 7 |
| | | உரைநடை | வளர்தமிழ் | 10 |
| | | விரிவானம் | கனவு பலித்தது | 14 |
| | | கற்கண்டு | தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் | 16 |
| 2. | இயற்கை | | இயற்கை இன்பம் | 22 |
| | | கவிதைப்பேழை | சிலப்பதிகாரம் ✸ | 23 |
| | | | காணி நிலம் ✸ | 26 |
| | | உரைநடை | சிறகின் ஓசை | 30 |
| | | விரிவானம் | கிழவனும் கடலும் | 34 |
| | | கற்கண்டு | முதலெழுத்தும் சார்பெழுத்தும் | 35 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✸ | 41 |
| 3. | அறிவியல், தொழில்நுட்பம் | | எந்திர உலகம் | 43 |
| | | கவிதைப்பேழை | அறிவியல் ஆத்திசூடி | 44 |
| | | | அறிவியலால் ஆள்வோம் | 47 |
| | | உரைநடை | கணியனின் நண்பன் | 50 |
| | | விரிவானம் | ஒளி பிறந்தது | 54 |
| | | கற்கண்டு | மொழி முதல். இறுதி எழுத்துகள் | 56 |

# பருவம் - 2

## பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | 64 |
| 1. | கல்வி | | கண்ணெனத் தகும் | 65 |
| | | கவிதைப்பேழை | மூதுரை ✱ | 66 |
| | | | துன்பம் வெல்லும் கல்வி | 69 |
| | | உரைநடை | கல்விக்கண் திறந்தவர் | 72 |
| | | விரிவானம் | நூலகம் நோக்கி... | 76 |
| | | கற்கண்டு | இன எழுத்துகள் | 79 |
| 2. | நாகரிகம், பண்பாடு | | பாடறிந்து ஒழுகுதல் | 86 |
| | | கவிதைப்பேழை | ஆசாரக்கோவை | 87 |
| | | | கண்மணியே கண்ணுறங்கு | 91 |
| | | உரைநடை | தமிழர் பெருவிழா | 94 |
| | | விரிவானம் | மனம் கவரும் மாமல்லபுரம் | 98 |
| | | கற்கண்டு | மயங்கொலிகள் | 101 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✱ | 106 |
| 3. | தொழில், வணிகம் | | கூடித் தொழில் செய் | 110 |
| | | கவிதைப்பேழை | நானிலம் படைத்தவன் | 111 |
| | | | கடலோடு விளையாடு ✱ | 115 |
| | | உரைநடை | வளரும் வணிகம் | 119 |
| | | விரிவானம் | உழைப்பே மூலதனம் | 123 |
| | | கற்கண்டு | சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள் | 126 |

# பருவம் - 3

## பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | 133 |
| 1. | நாடு, சமூகம், அரசு, நிர்வாகம் | புதுமைகள் செய்யும் தேசமிது | | 134 |
| | | கவிதைப்பேழை | பாரதம் அன்றைய நாற்றங்கால் * | 135 |
| | | உரைநடை | தமிழ்நாட்டில் காந்தி | 138 |
| | | விரிவானம் | வேலுநாச்சியார் | 141 |
| | | கற்கண்டு | நால்வகைச் சொற்கள் | 142 |
| 2. | அறம், தத்துவம், சிந்தனை | எல்லாரும் இன்புற | | 147 |
| | | கவிதைப்பேழை | பராபரக் கண்ணி * | 148 |
| | | | நீங்கள் நல்லவர் | 151 |
| | | உரைநடை | பசிப்பிணி போக்கிய பாவை | 154 |
| | | விரிவானம் | பாதம் | 157 |
| | | கற்கண்டு | பெயர்ச்சொல் | 160 |
| | | வாழ்வியல் | திருக்குறள் * | 166 |
| 3. | மனிதம், ஆளுமை | இன்னுயிர் காப்போம் | | 168 |
| | | கவிதைப்பேழை | ஆசிய ஜோதி | 169 |
| | | உரைநடை | மனித நேயம் | 173 |
| | | விரிவானம் | முடிவில் ஒரு தொடக்கம் | 177 |
| | | கற்கண்டு | அணி இலக்கணம் | 179 |
| | | தொகுத்தறி தேர்வு - செப்டம்பர் 2022 | | 184 |
| | | தொகுத்தறி தேர்வு - டிசம்பர் 2022 | | 185 |
| | | தொகுத்தறி தேர்வு - ஏப்ரல் 2022 | | 186 |

# பருவம் – 1

# மனப்பாடப் பகுதிகள்

## இன்பத்தமிழ்

தமிழுக்கும் அமுதென்றுபேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நேர்!
தமிழுக்கு மணமென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

**- பாரதிதாசன்**

## சிலப்பதிகாரம்

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடை
போன்றுஇவ்
அங்கண் உலகு அளித்த லான்

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம் திரிதலான்

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்

**- இளங்கோவடிகள்**

## காணி நிலம்

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அங்குத்
தூணில் அழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் - அங்குக்
கேணி அருகினிலே - தென்னைமரம்
கீற்றும் இளநீரும்
பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும்

**- பாரதியார்**

## திருக்குறள்

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

**- திருவள்ளுவர்**

# இயல் ஒன்று

# தமிழ்த்தேன்



## கற்றல் நோக்கங்கள்

- செய்யுளின் பொருளைச் சொந்த நடையில் கூறுதல் – எழுதுதல்
- தமிழ் மொழியின் இனிமையை உணர்ந்து போற்றுதல்
- தமிழ்மொழியின் தனிச்சிறப்புகளைப் பட்டியலிடுதல்
- தன்னம்பிக்கையுடன் தனக்கான இலக்குகளை உருவாக்குதல்
- எழுத்துகளின் வகை, தொகைகளை அறிதல்

இயல் ஒன்று

கவிதைப்பேழை

# இன்பத்தமிழ்

## சொல்லும் பொருளும்

1. **நிருமித்த** - உருவாக்கிய
2. **சமூகம்** - மக்கள் குழு
3. **விளைவு** - வளர்ச்சி
4. **அசதி** - சோர்வு

## நூல் வெளி

பாரதிதாசனின் இயற்பெயர் **சுப்புரத்தினம்**. பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். தம் கவிதைகளில் **பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு** முதலான புரட்சிகரமான கருத்துகளைப் பாடுபொருளாகப் பாடியுள்ளார். எனவே, இவர் **புரட்சிக்கவி** என்று போற்றப்படுகிறார். இவர் **பாவேந்தர்** என்றும் சிறப்பிக்கப்படுகிறார். இப்பாடல், 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற நூலில் 'தமிழ்' என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளது.



## மதிப்பீடு (பக்கம்.4)

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **ஏற்றத் தாழ்வற்ற ................ அமைய வேண்டும்.**

   அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு **[அ) சமூகம்]**

2. **நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவருக்கு ................ ஆக இருக்கும்.**

   அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி **[ஈ) அசதி]**

3. **நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................**

   அ) நிலயென்று ஆ) நிலவென்று இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று **[ஆ) நிலவென்று]**

4. **தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................**

   அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள் இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள் **[ஆ) தமிழெங்கள்]**

5. **அமுதென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................**

அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று **[ஆ) அமுது + என்று]**

6. **செம்பயிர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................**

அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர் இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர் **[அ) செம்மை + பயிர்]**

## இன்பத்தமிழ் - பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | **விளைவுக்கு** | - | பால் | | **நீர்** |
| 2. | **அறிவுக்கு** | - | வேல் | | **தோள்** |
| 3. | **இளமைக்கு** | - | நீர் | | **பால்** |
| 4. | **புலவர்க்கு** | - | தோள் | | **வேல்** |

## ஒத்த ஓசையில் முடியும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.

எ.கா. பேர் - நேர்

**பேர்** - நீர்

**பேர்** - ஊர்

**பால்** - வேல்

**வான்** - தேன்

**தோள்** - வாள்

## குறுவினா

1. **பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?**

**பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள்**

- அமுது
- நிலவு
- மணம்

2. **நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?**

- நாங்கள் தமிழைத் தாயோடு ஒப்பிடுவோம்.

## சிறுவினா

1. **இன்பத்தமிழ் - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.**

**இன்பத்தமிழ் - பாடலில் எனக்குப் பிடித்த அடிகள்**

- தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
- தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்

2. **சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?**

- நீர்தான் விவசாயத்திற்கு அடிப்படை.
- விவசாயமே சமூக வளர்ச்சிக்குத் தேவை.
- தமிழ், நீர் போன்று சமூக வளர்ச்சிக்கு உதவுகிறது.

## சிந்தனை வினா

**வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது?**

- இடித்துரைத்து நல்வழிப்படுத்தும் அறக் கருத்துகள் தமிழ் இலக்கியங்களில் உள்ளன.
- கத்தி முனையை விட பேனா முனை வலிமையானது.
- எனவே, சான்றோர் நாவில் தவழும் தமிழ் வேலுடன் ஒப்பிடப்படுகிறது.

---

## கற்பவை கற்றபின் (பக்கம்.3)

**தமிழை அமுது, நிலவு, மணம் என்று பெயரிட்டு அழைப்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

- அமுதம் பருகியவருக்கு மூப்பு கிடையாது.
- தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றவருக்கு இளமை என்றும் குறையாது.
- சுட்டெரிப்பது ஞாயிறு.
- குளிர்ந்த கதிர்களைப் பூமிக்கு அனுப்புவது நிலவு.
- மனதிற்கு இதம் தரும் பாடல்களைக் கொண்டவை சங்க இலக்கியங்கள்.
- அவை நிலவின் குளிர்ச்சிக்கு ஒப்பானவை.
- பூக்களின் தன்மையை அவற்றின் நறுமணம் சொல்லும்.
- தமிழ் பாக்களின் தன்மையை அவற்றின் செய்யுள் மணம் சொல்லும்.

---

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பாவேந்தர் என்று சிறப்பிக்கப்படுபவர் ............ **பாரதிதாசன்**
2. அசதி என்பதன் பொருள் ............ **சோர்வு**

## குறுவினாக்கள்

1. **பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?**
   - பாரதிதாசனின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம்.

2. **பாரதிதாசன் என்று தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?**
   - பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

3. **பாரதிதாசன் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப்படுகிறார்?**
   - பாரதிதாசன் புரட்சிக்கவி, பாவேந்தர் என்று சிறப்பிக்கப்படுகிறார்.

கவிதைப்பேழை

# இயல் ஒன்று

# தமிழ்க்கும்மி

## சொல்லும் பொருளும்

1. **ஆழிப்பெருக்கு** - கடல்கோள்
2. **மேதினி** - உலகம்
3. **ஊழி** - நீண்டதொரு காலப்பகுதி
4. **உள்ளப்பூட்டு** - உள்ளத்தின் அறியாமை

## நூல் வெளி



பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் **மாணிக்கம்.** இவர் **பாவலரேறு** என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். **கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம்** முதலான நூல்களை இயற்றியுள்ளார். **தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்** ஆகிய இதழ்களை நடத்தினார். தனித்தமிழையும் தமிழுணர்வையும் பரப்பிய பாவலர் இவர்.

இப்பாடல் **கனிச்சாறு** என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் எட்டுத் தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது.

## மதிப்பீடு (பக்கம்.7)

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தாய்மொழியில் படித்தால் ................ அடையலாம்.**

அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை **[ஆ) மேன்மை]**

2. **தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ................ சுருங்கிவிட்டது.**

அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று **[அ) மேதினி]**

3. **செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................**

அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ் **[ஈ) செம்மை + தமிழ்]**

4. **பொய்யகற்றும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக் கிடைப்பது .................**

அ) பொய் + அகற்றும் ஆ) பொய் + கற்றும் இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்

**[அ) பொய் + அகற்றும்]**

5. பாட்டு + இருக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................

அ) பாட்டிருக்கும் ஆ) பாட்டுருக்கும் இ) பாடிருக்கும் ஈ) பாடியிருக்கும் **[அ) பாட்டிருக்கும்]**

6. எட்டு + திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................

அ) எட்டுத்திசை ஆ) எட்டிதிசை இ) எட்டுதிசை ஈ) எட்டிஇசை **[அ) எட்டுத்திசை]**

## நயம் உணர்ந்து எழுதுக.

1. **பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களை எடுத்து எழுதுக.**
   - கொட்டுங்கடி - கோதையரே
   - எட்டு - எட்டிடவே
   - ஊழி - ஊற்றெனும்
   - ஆழி - அழியாமலே
   - பொய் - பூண்டவரின்
   - மெய்புகட்டும் - மேதினி

2. **பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களை எடுத்து எழுதுக.**
   - கொட்டுங்கடி - எட்டுத்
   - ஊழி - ஆழி
   - பொய் - மெய்புகட்டும்
   - எட்டுங்கடி - எட்டிடவே
   - ஆழி - அழியாமலே

3. **பாடல் அடிகளில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.**
   - கொட்டுங்கடி - கொட்டுங்கடி
   - கொண்டதுவாம் - நின்றதுவாம்
   - பாட்டிருக்கும் - காட்டிருக்கும்

## குறுவினா

1. **தமிழ்மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

   **தமிழ்மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன**
   - பொய்யை அகற்றும், மனத்தின் அறியாமையை நீக்கும்.
   - உண்மையை ஊட்டும், உயர்ந்த அறத்தைத் தரும்.
   - இந்த உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளையும் காட்டும்.

2. **செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?**
   - செந்தமிழின் புகழ் எட்டுத்திசைகளிலும் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

## சிறுவினா

1. **கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?**
   **கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம்**
   - பலநூறு ஆண்டுகளைக் கண்டது தமிழ்மொழி.
   - அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்ட மொழி.
   - பெரும் கடல் சீற்றங்கள், கால மாற்றங்கள் ஆகிய எவற்றாலும் அழியாமல் நிலைத்திருக்கும் மொழி.

2. **தமிழ்க்கும்மி பாடலின்வழி நீங்கள் அறிந்துகொண்டவற்றை உம் சொந்த நடையில் எழுதுக.**
   - தமிழ்மொழி பலநூறு ஆண்டுகளைக் கண்டுள்ளது.
   - பல அறிவான நூல்களைக் கொண்டது தமிழ்மொழி.
   - கால மாற்றங்களிலும் அழியாமல் நிலைத்திருப்பது தமிழ்மொழி.
   - உயர்ந்த அறம் தரும் மொழி தமிழ்மொழி.
   - உலகம் சிறந்து வாழ வழிகாட்டும்மொழி தமிழ்மொழி.

## சிந்தனை வினா

**தமிழ்மொழி அறியாமையை எவ்வாறு அகற்றும்?**
- தமிழ்நூல்கள் பகுத்தறிவை வளர்க்கும்.
- இதனால் அறியாமை நீங்கும்.
- மனத்தின் அறியாமையை நீக்குவன தமிழ் இலக்கண இலக்கியங்கள்.
- இதைத்தான் வள்ளுவரும் 'கற்றனைத் தூறும் அறிவு' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் ............ **மாணிக்கம்**
2. கனிச்சாறு நூல் ............ தொகுதிகளாக வெளிவந்துள்ளது. **எட்டுத்**

## குறுவினாக்கள்

1. **பாவலரேறு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர் யார்?**
   - பாவலரேறு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர் பெருஞ்சித்திரனார்.

2. **பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள் யாவை?**
   **பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள்**
   - கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக் கொத்து, நூறாசிரியம்.

3. **பெருஞ்சித்திரனார் நடத்திய இதழ்களின் பெயர்களைக் கூறுக.**
   **பெருஞ்சித்திரனார் நடத்திய இதழ்கள்**
   - தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்.

உரைநடை உலகம்

# இயல் ஒன்று

# வளர்தமிழ்

ZM79G

## மதிப்பீடு (பக்கம்.13)

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தொன்மை என்னும் சொல்லின் பொருள் .................**
   அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை **[ஆ) பழமை]**

2. **இடப்புறம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................**
   அ) இடன் + புறம் ஆ) இடை + புறம் இ) இடம் + புறம் ஈ) இடப் + புறம் **[இ) இடம் + புறம்]**

3. **சீரிளமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................**
   அ) சீர் + இளமை ஆ) சீர்மை + இளமை இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை **[ஆ) சீர்மை + இளமை]**

4. **சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .................**
   அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம் இ) சிலம்புதிகாரம் ஈ) சிலபதிகாரம் **[ஆ) சிலப்பதிகாரம்]**

5. **கனினி + தமிழ் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .................**
   அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ் இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ் **[ஆ) கணினித்தமிழ்]**

6. **தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடியவர் .................**
   அ) கண்ணதாசன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன் **[ஆ) பாரதியார்]**

7. **'மா' என்னும் சொல்லின் பொருள் .................**
   அ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா **[இ) விலங்கு]**

### கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது **மொழி.**
2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் **தொல்காப்பியம்.**
3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அஃது **எண்களின்** அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

### சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.

1. **தனிச்சிறப்பு** - தமிழ்மொழி **தனிச்சிறப்பு** வாய்ந்தது.
2. **நாள்தோறும்** - நான் **நாள்தோறும்** மாலையில் விளையாடுவேன்.

## குறுவினா

1. **தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?**
    - தொல்காப்பியம் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல்.
    - அப்படி என்றால் அதற்கும் முன்னதாகவே தமிழில் இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டும்.
    - எனவே தமிழ் மூத்தமொழி எனப்படுகிறது.

2. **நீங்கள் அறிந்த தமிழ்க்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**
    - சீவகசிந்தாமணி,
    - சிலப்பதிகாரம்,
    - மணிமேகலை,
    - வளையாபதி,
    - குண்டலகேசி.

## சிறுவினா

1. **அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?**
    - உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமைய வேண்டும்.
    - ஆனால் தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை (அல் + திணை = உயர்வு அல்லாத திணை) என்று பெயர் இட்டனர் நம் முன்னோர்.
    - பாகற்காய் கசப்புச்சுவை உடையது.
    - அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல், இனிப்பு அல்லாத பாகற்காய் (பாகு + அல் + காய்) என வழங்கினர்.
    - இவையே அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு ஆகும்.

2. **தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.**
    - தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை.
    - ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.
    - பல மொழிகள் கற்ற கவிஞர் பாரதியார், யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று தமிழ்மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.

3. **தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.**
    - தமிழ்மொழி சிறப்புமிக்க செம்மொழியாகும்.
    - தமிழ்மொழி பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி.
    - தமிழ்மொழி சொல்வளம் மிக்கது.
    - இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.
    - கணினி, இணையம் போன்றவற்றில் பயன்படத்தக்க வகையில் புதுமொழியாகவும் தமிழ் திகழ்கிறது.

## சிந்தனை வினா

**1. தமிழ்மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது?**

- உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் எழுத்துகள்.
- உயிர் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்துகொண்டால் உயிர்மெய் எழுத்துக்களை எளிதாக ஒலிக்கலாம்.
- எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ்ப் படித்தல் இயல்பாக நிகழ்ந்து விடும்.
- தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துக்களாகவே அமைந்துள்ளன.
- இதனால் தமிழ் மொழியை எழுதும் முறையும் மிக எளிது தான்.

**2. தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.**

- தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன.
- செய்யுள், கவிதை, புதுக்கவிதை, துளிப்பா போன்றன தமிழ்க் கவிதை வடிவங்கள்.
- கட்டுரை, புதினம், சிறுகதை போன்றன உரைநடை வடிவங்கள்.
- தற்போது அறிவியல் தமிழ், கணினித் தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது.

## தெரிந்து தெளிவோம் (பக்கம்.9, 10)

| சொல் | முதலில் ஆளப்படும் இலக்கியம் | மேற்கோள் |
|---|---|---|
| தமிழ் | தொல்காப்பியம் | தமிழெென் கிளவியும் அதனோ ரற்றே -<br>தொல் : 386 |
| தமிழ்நாடு | சிலப்பதிகாரம்<br>வஞ்சிக்காண்டம் | இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய<br>இதுநீ கருதினை ஆயின் - வஞ்சி : 165 |
| தமிழன் | அப்பர் தேவாரம் | ... தமிழன் கண்டாய் - திருத்தாண்டகம் : 23 |

| தாவர இலைப் பெயர்கள் | |
|---|---|
| ஆல், அரசு, மா, பலா, வாழை | இலை |
| அகத்தி, பசலை, முருங்கை | கீரை |
| அருகு, கோரை | புல் |
| நெல், வரகு | தாள் |
| மல்லி | தழை |
| சப்பாத்திக் கள்ளி, தாழை | மடல் |
| கரும்பு, நாணல் | தோகை |
| பனை, தென்னை | ஓலை |
| கமுகு (பாக்கு) | கூந்தல் |

## கற்பவை கற்றபின் (பக்கம்.13)

1. **மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ் என்பது பற்றிக் கலந்துரையாடுக.**
   - ❖ தொல்காப்பியம், நன்னூல் போன்றவை நாம் படிப்பதற்காக எழுதப்பட்டவை.
   - ❖ ஆயினும் அவை கணினி மொழிக்கும் ஏற்ற நுட்பமான வடிவத்தையும் பெற்றுள்ளன.
   - ❖ மூத்த மொழியான தமிழ் - கணினி, இணையம் போன்றவற்றில் பயன்படத்தக்க வகையில் புது மொழியாகவும் திகழ்கிறது.
   - ❖ செய்யுள், கவிதை, புதுக்கவிதை, துளிப்பா எனத் தமிழ்க் கவிதை வடிவம் காலத்திற்கு ஏற்ப மாறி உள்ளது.
   - ❖ கட்டுரை, புதினம், சிறுகதை என்று உரைநடை வடிவங்கள் மாறி உள்ளன.
   - ❖ வன்பொருள், மென்பொருள், உலாவி, சுட்டி, பதிவிறக்கம் என்று காலத்திற்கேற்ப தமிழ் மொழியில் சொற்களஞ்சியம் பெருகியுள்ளது

2. **தமிழ் பேசத் தெரியாத குடும்பத்தினர் உங்கள் பக்கத்து வீட்டில் உள்ளனர். அவர்களுக்கு நீங்கள் கற்றுத் தர விரும்பும் பத்துத் தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. வணக்கம் | 4. வரலாமா? | 7. தாருங்கள் | 10. நன்றி |
| 2. வாழ்த்துகள் | 5. அமருங்கள் | 8. நலமா? | |
| 3. வாருங்கள் | 6. தெரியுமா? | 9. போகலாமா? | |

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் ............ எழுத்துகளாகவே அமைந்துள்ளன. **வலஞ்சுழி**
2. ............. என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல். **சீர்மை**
3. உலகில் ............ மேற்பட்ட மொழிகள் உள்ளன. **ஆறாயிரத்திற்கும்**

### குறுவினாக்கள்

1. **'மா' என்னும் ஒரு சொல் தரும் பல பொருள்களை எழுதுக.**
   - ➢ மா - என்னும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அளவு, அறிவு, அழகு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு போன்ற பல பொருள்களைத் தருகிறது.

2. **இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன என்பதற்குச் சான்று தருக.**
   - ➢ இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.
   - ➢ இணையம், முகநூல், புலனம், குரல் தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

# இயல் ஒன்று

விரிவானம்

# கனவு பலித்தது

கடிதம்

3J7Z5

## மதிப்பீடு (பக்கம்.17)

**அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.**

- நீண்ட நெடுங்காலமாகவே அறிவியல் சிந்தனைகளோடு விளங்கியவர்கள் தமிழர்கள். தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் பல காணப்படுகின்றன.
- நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்தது இவ்வுலகம் என்று குறிப்பிடும் தொல்காப்பியர் உலக உயிர்களை ஓர் அறிவு முதல் ஆறறிவு வரை தொல்காப்பியத்தில் வகைப்படுத்தி உள்ளார்.
- கடல் நீர் ஆவியாகி மேகமாகும். பின்னர் மேகம் குளிர்ந்து மழையாகப் பொழியும். இந்த அறிவியல் செய்தி முல்லைப்பாட்டு, பரிபாடல், திருக்குறள், கார் நாற்பது, திருப்பாவை முதலிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்.
- நாழி முகவாது நால் நாழி - ஔவையார். திரவப் பொருள்களை எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவைச் சுருக்க முடியாது என்ற அறிவியல் கருத்து விளக்கப்பட்டுள்ளது. பதிற்றுப்பத்து, நற்றிணையில் காயத்தை ஊசி மற்றும் நரம்பினால் தைத்த செய்தி இன்றைய அறுவை சிகிச்சையை அன்றே தமிழர் செய்தனர் என்பதற்கான சான்று.
- தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் என்ற கலீலியோவின் இன்றைய கருத்தை கபிலர் தம் திருவள்ளுவ மாலையில் அன்றே குறிப்பிட்டுள்ளார் என்ற கருத்துகளை இன்சுவைக்கு அத்தை நறுமுகை எழுதினார்.
- நூல் வாசிப்பு சிந்தனை வளம் கூட்டி அறிவியல் மனப்பான்மையைப் பெருக்கும். தமிழ் படித்தால் சாதிக்க முடியாது என்பது தவறான எண்ணம். சாதனைக்கு மொழி ஒரு தடையல்ல என்று ஊக்கப்படுத்தினார்.

## தெரிந்து தெளிவோம் (பக்கம்.17)

**தமிழில் பயின்ற அறிவியல் அறிஞர்கள்**

- மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு **டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல்கலாம்**
- இஸ்ரோ அறிவியல் அறிஞர் **டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை**
- இஸ்ரோவின் மேனாள் தலைவர் **டாக்டர் கை.சிவன்**

## கற்பவை கற்றபின் (பக்கம்.17)

1. **'கனவு பலித்தது' - இக்கடிதத்திற்கு நீங்கள் விரும்பும் வகையில் வேறொரு தலைப்பிடுக.**
   - 'சாதித்த தமிழ்'
   - 'தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்'

---

2. **உங்கள் எதிர்காலக் கனவு குறித்து ஒரு கடிதம் எழுதுக.**

18-08-2022,
**விருதுநகர்.**

அன்புள்ள மாமாவுக்கு,

வணக்கம். நான் நலம் நீங்கள் நலமா?

கனவு காணுங்கள் அது ஒரு நாளில் நனவாகும் என்றார் அப்துல் கலாம் அவர்கள். என் திறமை மீதும் எதிர்காலம் மீதும் தாங்கள் மிகவும் அக்கறை கொண்டவர். அதனால் என் எதிர்கால கனவு குறித்து உங்களுக்கு எழுதுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். தற்சார்பு வாழ்க்கை கொண்டவர் நம் முன்னோர். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நம் பகுதியில் ஒரு படித்த விவசாயியாக நான் சிறந்து விளங்க விரும்புகிறேன். பயிர்கள் விளைவதற்கு இயற்கை உரங்கள், மண்புழு உரங்கள், பசுந்தாள் உரங்கள் பயன்படுத்தி மண்ணை உயிர்ப்பு உள்ளதாக மாற்றுவேன். உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் தொழிற்சாலையில் விலை நிர்ணயிப்பதைப் போல என் விளை பொருள்களுக்கும் நானே விலை நிர்ணயிப்பேன். இயன்றவரை விவசாயம் சார்ந்த கோழி, ஆடு வளர்ப்பு, மீன் குட்டைகள் அமைத்தல் போன்றவற்றை இணைந்து செய்வேன். நிலத்தடி நீர் வளம் அதிகரிக்க பண்ணைக் குட்டைகள் அமைப்பேன். மாற்றுப் பயிர் முறையைக் கடைப்பிடித்து மகசூல் பெருக்குவேன். இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும் இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும். தங்களின் ஊக்கம் மிகுந்த அறிவுரைகள் என் கனவை நினைவாக்கும் என்று கருதுகிறேன். மற்றவை நேரில்.

தங்கள் அன்புள்ள,
மு.எழிலன்

---

3. **இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?**

   இலக்கினை உருவாக்கிக் கொண்டால் மட்டும் போதாது அதை நோக்கி முன்னேற உழைக்க வேண்டும். ஐயங்களை அவ்வப்போது ஆசிரியர்களின் உதவியோடு தீர்த்துக் கொண்டாள் இன்சுவை. அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் கற்றால் அறிவியல் அறிஞராக முடியாது என்பது தவறான கருத்து. இதை உறுதியாக நம்பினாள் இன்சுவை. அத்தை நறுமுகை கூறியபடி நூல்கள் பலவற்றையும் தொடர்ந்து படித்து வந்தாள் அவள். இவையே இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்கள் என்று நான் கருதுகிறேன்.

---

4. **'கனவு பலித்தது' என்ற தலைப்பு இக்கடிதத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதனை விளக்குக.**

   பள்ளிப்பருவத்திலேயே அறிவியல் அறிஞர் ஆக வேண்டும் என்பது இன்சுவையின் கனவு. ஆனால் அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் படித்து அறிவியல் அறிஞர் ஆக முடியாது என்று பலரும் அவளிடம் கூறினார்கள். அத்தை நறுமுகை அவளுக்குப் பல கடிதங்கள் மூலம் நம்பிக்கை ஊட்டினார். தமிழில் படித்தால் சாதிக்க முடியாது என்பது தவறான எண்ணம்; தாய் மொழியில் படித்தவர்களே சாதனையாளர்களாக இவ்வுலகில் இருக்கிறார்கள் என்று நம்பிக்கை ஊட்டினார் அத்தை. அவர் கூறிய தமிழ் இலக்கியங்களையும் பிற நூல்களையும் தொடர்ந்து படித்து வந்தாள் இன்சுவை. தற்போது இளம் அறிவியல் ஆய்வாளர் பணிக்கு இன்சுவை தெரிவு செய்யப்பட்டு இருக்கிறாள். மறுநாள் காலை 'சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு நிறுவனத்தில்' பணியில் சேர வேண்டும் என்ற நிலையில் அத்தைக்கு அவள் எழுதிய கடிதத்திற்கே 'கனவு பலித்தது' என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இன்சுவையின் பள்ளிக்கனவு பலித்தது தன் அத்தை நறுமுகையால் என்பதால் இத்தலைப்பு மிகவும் பொருத்தமானதே!

கற்கண்டு

# இயல் ஒன்று

# தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்

## மதிப்பீடு (பக்கம்.20)

### கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக.

1. உயிரெழுத்தில் தொடங்கும் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல் **அணி.**
2. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச் சொல் **ஆ.**
3. ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் **எஃகு.**

### குறுவினா

1. **தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

   **தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை**

   1. எழுத்து இலக்கணம்
   2. சொல் இலக்கணம்
   3. பொருள் இலக்கணம்
   4. யாப்பு இலக்கணம்
   5. அணி இலக்கணம்

2. **மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.**

   1. வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
   2. மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்
   3. இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

3. **தமிழ் எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.**

   1. குறில் எழுத்து - 1 மாத்திரை
   2. நெடில் எழுத்து - 2 மாத்திரை
   3. மெய்யெழுத்து - அரை மாத்திரை
   4. ஆய்த எழுத்து - அரை மாத்திரை

## கற்பவை கற்றபின் (பக்கம்.20)

**உங்கள் பெயர் மற்றும் உங்கள் நண்பர்களது பெயர்களுக்கான மாத்திரை அளவைக் கண்டுபிடி.**

**எ.கா. கபிலர் - 1 + 1 + 1 + ½ = 3 ½**

**எழிலன்** - 1 + 1+ 1 + ½ = 3 ½

**அந்தோணி** - 1 + ½ + 2 + 1 = 4 ½

**முகமது யூசுப்** - 1 + 1 + 1 + 1 + 2 + 1 + ½ = 7 ½

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு ............ மாத்திரை. **ஒரு**
2. மெய் என்பது ............ என பொருள்படும். **உடம்பு**
3. ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவு ............ மாத்திரை. **அரை**
4. உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை ............ **216**
5. தமிழ் இலக்கணம் ............ வகைப்படும். **ஐந்து**

### குறுவினாக்கள்

1. **ஒரு மாத்திரைக்குரிய கால அளவு யாது?**
   - ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கை நொடிக்கவோ ஆகும் கால அளவே ஒரு மாத்திரைக்குரிய கால அளவாகும்.

2. **உயிர் எழுத்துகள் எவ்வாறு பிறக்கின்றன?**
   - வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் அ முதல் ஒள வரை உள்ள பன்னிரண்டு உயிரெழுத்துகளும் பிறக்கின்றன.



# மொழியை ஆள்வோம் (பக்கம்.21)

## கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக

* தமிழ் இனிது  * தமிழ் எளிது  * தமிழ் புதிது

**தமிழ் இனிது**

இயற்கையில் அமைந்துள்ள பொருட்களைப் பார்த்தவுடன், நுகர்ந்தவுடன், மனதில் நினைத்தவுடன் நமக்கு இன்பம் வந்துவிடும், அதுபோல தமிழைப் பற்றி நினைத்தவுடன் இன்ப உணர்வு மனதில் தோன்றி விடும். அமுதத்தை உண்ணும்போது கிடைக்கும் மகிழ்ச்சி , தமிழைப் படிக்கும்போது கிடைக்கும்.

பாரதிதாசன் தமிழின் இனிமை பற்றிக் கூறும் போது நன்கு பழுத்த பலாவின் சுவையையும், நன்கு முற்றியிருக்கும் செங்கரும்பின் சாறும், இயற்கையான மலர்களில் இருந்து தேனிகளால் சேகரிக்கப்பட்ட சுவை மிகுந்த தேனும், பாகு என்றாலே இனிப்பு அந்தப் பாகில் ஊற வைத்த பலகாரத்தின் சுவையையும், பசுவிலிருந்து தூய்மையான பாலும், தென்னை மரத்திலிருந்து புதிதாக இறக்கப்பட்ட குளிர்ந்த இளநீரும் பார்த்தாலே இனிமை தரக்கூடியன என்றாலும் இவை எல்லாவற்றின் இனிமையையும் விட தமிழின் இனிமை மேலானது என கூறுகின்றார்.

**தமிழ் எளிது**

தமிழ் மொழி பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர் மெய் எழுத்துகள். உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் உயிர்மெய் எழுத்துகளை எளிதாக ஒலிக்கலாம். எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழ்ந்துவிடும்.

தமிழ் மொழியை எழுதும் முறையும் மிக எளிது தான். இதற்கு ஏற்ப தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.

**தமிழ் புதிது**

இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன. இணையம், முகநூல், புலனம், குரல் தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். சமூக ஊடகங்களான செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிலும் பயன்படத்தக்க மொழியாக விளங்குகிறது தமிழ். செய்யுள், கவிதை, புதுக்கவிதை, துளிப்பா என்றும் கட்டுரை, புதினம், சிறுகதை என்றும் தமிழ் காலத்திற்கேற்ப புதுமை மிக்க மொழியாக உருவெடுத்துள்ளது.

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, சுத்தம் சோறு போடும் என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல்நலமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

1. **பழமொழியின் சிறப்பு ................. சொல்வது.**

   அ) விரிவாகச் ஆ) சுருங்கச் இ) பழைமையைச் ஈ) பலமொழிகளில் **[ஆ) சுருங்கச்]**

2. நோயற்ற வாழ்வைத் தருவது **சுத்தம்.**
3. உடல்நலமே **உழைப்புக்கு** அடிப்படை.
4. **உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை?**

   உழைத்துத் தேடிய பொருளால் நாம் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம்.

5. **பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.**

   பழமொழியின் சிறப்பு

## பிறமொழிக் கலப்பின்றிப் பேசுக.

1. **எங்க ஸ்கூல்லே சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.**

   எங்க **பள்ளியில்** சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.

2. **பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.**

   பெற்றோரிடம் **அனுமதிக் கடிதம்** வாங்கி வரச் சொன்னாங்க.

## ஆய்ந்தறிக.

**பெயரில் தலைப்பெழுத்தைப் பலவகையாக எழுதுகின்றோம்.**

**S.இனியன், எஸ்.இனியன், ச.இனியன் - இவற்றுள் சரியானது எது? ஏன்?**

- ச. இனியன் என்பது சரியானது.
- ஏனெனில் பிறமொழிக் கலப்பின்றி எழுதுவதே சரியானது.
- பெயரும், தலைப்பெழுத்தும் தமிழிலேயே அமைய வேண்டும்.

## கடிதம் எழுதுக.

### விடுப்பு விண்ணப்பம்

**அனுப்புநர்**

ம. பரிதி,
ஆறாம் வகுப்பு, 'அ' பிரிவு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
மதுரை.

**பெறுநர்**

வகுப்பு ஆசிரியர் அவர்கள்,
ஆறாம் வகுப்பு, 'அ' பிரிவு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
மதுரை.

மதிப்பிற்குரிய அம்மா,

வணக்கம். நான் நாளை என் அக்காவின் திருமணத்திற்காக ஊருக்குச் செல்கிறேன். எனவே என்னால் பள்ளிக்கு வர இயலாது. நாளை ஒருநாள் மட்டும் (04-07-2023) எனக்கு விடுப்பு தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

மிக்க நன்றி,

இப்படிக்கு,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்,
ம.பரிதி.

**நாள்** - 03.07.2023

**இடம்** - மதுரை.

# மொழியோடு விளையாடு (பக்கம்.22)

## திரட்டுக.

**'மை' என்னும் எழுத்தில் முடியும் சொற்களின் பட்டியல் தயாரிக்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| இனிமை | செம்மை | ஒருமை | தன்மை | இளமை |
| அருமை | நன்மை | பன்மை | உண்மை | பெருமை |

## சொல் வளம் பெறுவோம்

1. **கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.**

எ.கா. கரும்பு - கரு, கம்பு

கவிதை - கவி, கதை, விதை, தை

பதிற்றுப்பத்து - பத்து, துறு, துதி, பதி, பத்தி, பற்று

பரிபாடல் - பரி, பாடல், பால், பா, பாரி, பால்

2. **இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நூல் | மொழி | கோல் | மீன் | நீதி | எழுது |
| கண் | வெளி | தமிழ் | மணி | மாலை | விண் |

**எ.கா. - விண்மீன்**

நீதிநூல், தமிழ்மொழி, எழுதுகோல், கண்மணி, மணிமாலை, விண்வெளி.

## பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அழகு | ஏற்றம் | இன்பம் | ஊக்கம் | இனிமை | ஆற்றல் | ஈடு | இசை |
| உணர்வு | ஏடுகள் | உரிமை | என்றும் | எளிதாய் | உவகை | அன்பு | |

**அ** - **அன்பு** தருவது தமிழ்

**ஆ** - **ஆற்றல்** தருவது தமிழ்

**இ** - **இன்பம்** தருவது தமிழ்

**ஈ** - ஈடு இல்லாதது தமிழ்

**உ** - **உணர்வு** தருவது தமிழ்

**ஊ** - **ஊக்கம்** தருவது தமிழ்

**எ** - **என்றும்** வேண்டும் தமிழ்

**ஏ** - **ஏற்றம்** தருவது தமிழ்

## கட்டங்களில் மறைந்துள்ள பெயர்களைக் கண்டுபிடிக்க.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ர | தி | தா | ச | ன் | க |
| ர | ம் | தா | ர | சு | ச | ம் |
| தி | ரு | வ | ள் | ளு | வ | ர் |
| பா | பா | தை | ஔ | வை | யா | ர் |
| ர் | ன் | ச | தா | ணி | வா | ன் |

1. பாரதிதாசன்
2. பாரதியார்
3. திருவள்ளுவர்
4. ஔவையார்
5. வாணிதாசன்

## நிற்க அதற்குத் தக..

**என் பொறுப்புகள்...**

1. நான் தாய்மொழியிலேயே பேசுவேன்.
2. தாய்மொழியிலேயே கல்வி கற்பேன்.
3. தமிழ்ப்பெயர்களையே சூட்டுவேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| வலஞ்சுழி | Clock wise | இடஞ்சுழி | Anti Clock wise |
| இணையம் | Internet | குரல்தேடல் | Voice Search |
| தேடுபொறி | Search engine | தொடுதிரை | Touch Screen |
| முகநூல் | Facebook | செயலி | App |
| புலனம் | Whatsapp | மின்னஞ்சல் | E-mail |



# பருவம் - 2

# மனப்பாடப் பகுதிகள்

## மூதுரை

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு

**- ஔவையார்**

## திருக்குறள்

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல்.

**- திருவள்ளுவர்**

## கடலோடு விளையாடு

பாயும்புயல் நம்ஊஞ்சல் - ஐலசா

பனிமூட்டம் உடல்போர்வை - ஐலசா

காயும்கதிர்ச் சுடர்கூரை - ஐலசா

கட்டுமரம் வாழும்வீடு - ஐலசா

மின்னல்வரி அரிச்சுவடி - ஐலசா

பிடிக்கும்மீன்கள் நம்பொருள்கள் - ஐலசா

முழுநிலவே கண்ணாடி - ஐலசா

மூச்சடக்கும்நீச்சல் யோகம் - ஐலசா

தொழும்தலைவன் பெருவானம் - ஐலசா

துணிவோடு தொழில்செய்வோம் - ஐலசா



# பருவம் - 3

# மனப்பாடப் பகுதிகள்

## பாரதம் அன்றைய நாற்றங்கால்

புல்வெளி யெல்லாம் பூக்கா டாகிப்
புன்னகை செய்த பொற்காலம்!
கல்லைக் கூட காவிய மாக்கிக்
கட்டி நிறுத்திய கலைக்கூடம்! (புதுமைகள்)
அன்னை நாட்டின் அமுத சுரபியில்
அன்னிய நாடுகள்பசிதீர
அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி
அறத்தின் ஊன்று கோலாக
புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது!

- தாராபாரதி

## பராபரக் கண்ணி

தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்
செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!

எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!

- தாயுமானவர்

## திருக்குறள்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

- திருவள்ளுவர்



## விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
## தொகுத்தறி தேர்வு - செப்டம்பர் 2022

**பகுதி - I மதிப்பெண்கள் : 60**

**அ) சரியான விடையைத் தேர்வு செய்க: 10x1=10**

1. **தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் .............. சுருங்கி விட்டது.**
   அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று
2. **கொங்கு + அலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ...............**
   அ) கொங்குஅலர் ஆ) கொங்அலர்
   இ) கொங்கலர் ஈ) கொங்குலர்
3. **மக்களுக்கு மகிழ்ச்சி தருவது ...............**
   அ) ஊக்கமின்மை ஆ) அறிவுடைய மக்கள்
   இ) வன்சொல் ஈ) சிறிய செயல்
4. **நண்பர்களுடன் ............... விளையாடு**
   அ) ஒரு மித்து ஆ) மாறுபட்டு
   இ) தனித்து ஈ) பகைத்து

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:**

5. இந்தியாவின் பறவை மனிதர் ...............
6. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் ...............

**இ) பொருத்துக:**

| | | |
|---|---|---|
| 7. இளமைக்கு | - | தென்றல் |
| 8. புலவர்க்கு | - | மாடங்கள் |
| 9. தூய நிறத்தில் | - | பால் |
| 10. சித்தம் மகிழ்ந்திட | - | வேல் |

**பகுதி - II**

**ஈ) ஓரிரு சொற்களில் விடையளிக்க: (ஏதேனும் ஐந்து வினாக்கள் மட்டும்) 5x2=10**

11. மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.
12. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?
13. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
14. மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை?
15. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?
16. ரோபோ என்னும் சொல் எவ்வாறு உருவானது?
17. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தி தொடங்குகிறது?

**உ) ஓரிரு தொடர்களில் விடை தருக: (ஏதேனும் மூன்று மட்டும்) 3x4=12**

18. பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட நாம் செய்ய வேண்டியவை பற்றி சிந்தித்து எழுதுக.
19. தமிழ்மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.
20. உங்களுக்கென ஒரு எந்திர மனிதன் இருந்தால் அதை எதற்கெல்லாம் பயன்படுத்துவீர்கள் என சிந்தித்து எழுதுக.
21. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?
22. உங்களுக்குத் தெரிந்த மருத்துவ முறைகள் யாவை?
23. அறிவியல் சிந்தனையைத் தூண்டும் முழக்கத் தொடர்கள் ஐந்து உருவாக்குக.

**பகுதி - III**


**ஊ) பின்வரும் கவிதைப்பகுதியை அடிபிறழாமல் எழுதுக: 4+2=6**

24. 'தமிழுக்கும் அமுதென்று' எனத் தொடங்கும் இன்பத் தமிழ் பாடலை எழுதுக.
25. 'தாய்' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பகுதி - IV**

**எ) அனைத்து வினாக்களுக்கு விடையளி: 10x1=10**

26. **அடிக்கோடிட்ட சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை எழுதுக:**
    காலிங்பெல்லை அழுத்தினான் கணியன்
27. **அடி சொல்லுடன் எழுத்துகளைச் சேர்த்து 2 புதிய சொற்களை உருவாக்குக:** அறி ______
28. **பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**
    அ) இலக்கிய மன்ற விழாவில் முகிலன் சிறப்பாக ............ ஆற்றினார். (உரை, உறை)
    ஆ) கபிலன் தம் ............ காரணமாக ஊருக்கு சென்றார். (பனி, பணி)
29. **பொருத்தமான சொற்களால் கட்டங்களை நிரப்புக:**
    பறவைகள் இடம் பெயர்தல்
30. **கலைச் சொல் அறிக:**
    Facebook - Satellite -
31. **பிறமொழி கலப்பின்றி எழுதுக:**
    எங்கள் ஸ்கூலில் சுற்றுலாவிற்காக பெற்றோரிடம் பர்மிஷன் லெட்டர் வாங்கி வரச் சொன்னார்கள்.
32. **கீழுள்ள பெயருக்கான மாத்திரை அளவைக் கண்டுபிடி:** அப்துல் கலாம் -
33. **கீழுள்ள சொல்லில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு 2 புதிய சொற்களை உருவாக்குக.**
    கவிதை -
34. **மெய் எழுத்து நடுவில் அமையுமாறு 2 சொற்களை உருவாக்குக:**




35. **கீழ்க்காணும் சொல்லின் பொருள் தரும் வேறு சொற்கள் இரண்டு எழுதுக:**
    கடல் -

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க : 1x6=6**

36. சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல்கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்? **(அ)**
37. 'கிழவனும் கடலும்' என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.

**பகுதி - V**

**ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க: 1x6=6**

38. 'இயற்கையைக் காப்போம்' என்ற தலைப்பில் கட்டுரைக வரைக. **(அல்லது)**
39. ஊருக்குச் செல்ல வேண்டி வகுப்பு ஆசிரியருக்கு விடுப்பு விண்ணப்பம் வரைக.

## விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
## தொகுத்தறி தேர்வு - டிசம்பர் 2022

**பகுதி - 1** **மதிப்பெண்கள் : 60**

**அ) சரியான விடையைத் தேர்வு செய்க: 10x1=10**

1. **வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் ..**
   அ) தொழிலாளி ஆ) நுகர்வோர்
   இ) நெசவாளி ஈ) முதலீட்டாளர்
2. **நிலையான செல்வம் ...............**
   அ) தங்கம் ஆ) பணம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்
3. **'உதித்த' - என்ற சொல்லுக்குரிய எதிர்ச்சொல் .........**
   அ) தோன்றிய ஆ) குறைந்த
   இ) நிறைந்த ஈ) மறைந்த
4. **'மாசற' - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............**
   அ) மாச + அற ஆ) மாச + உற
   இ) மாசு + அற ஈ) மாசு + உற

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:**

5. காமராசரைக் 'கல்விக் கண் திறந்தவர்' என மனதாரப் பாரட்டியவர் ...............
6. பழையன கழிதலும் ............... புகுதலும்.

**இ) பொருத்துக:**

7. விடிவெள்ளி - போர்வை
8. பனிமூட்டம் - வயல்
9. கழனி - உலகம்
10. பார் - விளக்கு

**பகுதி - 2**

**ஈ) ஓரிரு சொற்களில் விடையளிக்க: (ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும்) 5x2=10**

11. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?
12. நாம் யாருடன் நட்பு கொள்ள வேண்டும்?
13. ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் செல்லும்?
14. அகவினா - புறவினா வேறுபாடு யாது?
15. இன எழுத்துகள் என்றால் என்ன?
16. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?
17. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டுத் தருக.

**உ) ஓரிரு தொடர்களில் விடை தருக: (ஏதேனும் மூன்றனுக்கு மட்டும்) 3x4=12**

18. சிறு வணிகம், பெரு வணிகம் வேறுபடுத்துக.
19. காமராசரின் கல்விப் பணிகள் குறித்து எழுதுக.
20. காணும் பொங்கல் எவ்வாறு மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கிறது?
21. ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?
22. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?
23. நாட்டுப்புற இலக்கியங்களை வாய்மொழி இலக்கியங்கள் என்று கூறக் காரணம் என்ன?

**பகுதி - 3**

**ஊ) பின்வரும் கவிதைப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக: 4+2=6**

24. 'மன்னனும் மாசற' எனத் தொடங்கும் மூதுரை பாடலை எழுதுக.
25. 'சொல்லுக' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பகுதி - 4**

**எ) பின்வரும் வினாக்களுக்கு விடையளி: (ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும்) 5x2=10**

26. **பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக:**
    அ) தெண்றல் ............. ஆ) மன்டபம் .............
27. **இன எழுத்துகள் அமைந்துள்ள சொற்களை வட்டமிடுக:**
    அ) கங்கை, பக்கம், வண்டு
    ஆ) தந்தம், பஞ்சு தக்காளி
28. **தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக:**
    அ) எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.
    ஆ) வாளைப்பழம் உடலுக்கு மிகவும் நள்ளது.
29. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**
    அ) பறவை வானில் ............... (பறந்தது / பரந்தது)
    ஆ) இலைக்கு வேறுபெயர் ............ (தளை / தழை)
30. **கலைச்சொல் தருக:**
    அ) Consumer ஆ) Library
31. **இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக:**
    உள்ளுவது உயர்வுள்ளல் மற்றது எல்லாம்
    தள்ளாமை தள்ளினும் நீர்த்து.
32. **அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தக்க இடத்தில் சேர்த்து எழுதுக:**
    அ) நீங்கள் வரும்போது எனக்குப் புத்தகம் வாங்கி வாருங்கள். (ஒரு)
    ஆ) நான் சொன்ன வேலையை அக்கறையுடன் செய்திருக்கிறார்கள். (மிகுந்த)

**பகுதி - 5**

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க: 1x6=6**

33. 'உழைப்பே மூலதனம்' - கதையைச் சுருக்கி எழுதுக.
34. அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

**ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க: 1x6=6**

35. பிறந்தநாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.
36. 'காமராசர்' என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
    முன்னுரை
    இளமைக்காலம்
    கல்விப்பணி
    நிறைவேற்றிய பிற திட்டங்கள்
    முடிவுரை

## விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
## தொகுத்தறி தேர்வு - ஏப்ரல் 2022

பகுதி - I மதிப்பெண்கள் : 60

**அ) சரியான விடையைத் தேர்வு செய்க: 10x1=10**

1. **கலைக்கூடமாகக் காட்சி தருவது ...............**
   அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம்
   இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்
2. **'சோம்பல்' என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ...............**
   அ) அழிவு ஆ) துன்பம் இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்
3. **புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல் ...............**
   அ) ஜீவஜோதி ஆ) நவஜோதி
   இ) ஆசியஜோதி ஈ) ஜீவன்ஜோதி
4. **இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ...............**
   அ) இன்உயிர் ஆ) இனியஉயிர்
   இ) இன்னுயிர் ஈ) இனிமைஉயிர்

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:**

5. ஏழைகளுக்கு உதவி செய்வதே ............... ஆகும்.
6. ஒருவர் செய்யக் கூடாதது ...............

**இ) பொருத்துக:**

7. அன்னை தெரசா - பசிப்பிணி போக்கியவர்
8. குற்றலாம் - பாரதியார்
9. தமிழ்நாட்டுக் கவிஞர் - அருவி
10. வள்ளலார் - நோயாளிகளிடம் அன்பு காட்டியவர்

பகுதி - II

**ஈ) ஓரிரு சொற்களில் விடையளி: (ஏதேனும் ஐந்து மட்டும்) 5x2=10**

11. அமுதசுரபியின் சிறப்பு யாது?
12. யாரால் உலகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது?
13. சொற்களின் வகைகளை எழுதுக.
14. தாராபாரதி குறிப்பிடும் கவிஞர்கள் யாவர்?
15. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
16. 'கோமுகி' என்பதன் பொருள் யாது?
17. காரணப்பெயர் என்றால் என்ன?

**உ) ஓரிரு தொடர்களில் விடை தருக: (ஏதேனும் மூன்று மட்டும்) 3x4=12**

18. அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.
19. மணிபல்லவத்தீவு எவ்வாறு காட்சியளித்தது?
20. காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.
21. பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?
22. எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தபிரான் கூறும் அறிவுரைகள் யாவை?

பகுதி - III

**ஊ)** 23. ''தம் உயிர்போல் எவ்வுயிரும்'' எனத் தொடங்கும் பராபரக்கண்ணி பாடலை எழுதுக. **6**

பகுதி - IV

**எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 10x1=10**

24. **இரு பொருள் தருக:**
    அ) ஆறு - ஆ) நகை -
25. **கலைச்சொல் தருக:**
    **Mercy -**
26. **ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக:**
    மனம் - மணம்
27. **அடிக்கோடிட்ட சொல் எவ்வகைச்சொல் என எழுதுக:**
    நீதி நூல் பயில் என்கிறார் <u>பாரதியார்</u>.
28. **காரணப்பெயரை வட்டமிடுக:**
    அ) மரம் ஆ) வளையல் இ) சுவர் ஈ) யானை
29. கல்லைக் கூட காவிய மாக்கிக்
    கட்டி நிறுத்திய கலைக்கூடம்!
    **- இப்பாடல் வரியில் <u>மோனைச்</u> சொற்களை எடுத்து எழுதுக.**
30. **சொற்றொடரில் அமைத்து எழுதுக:**
    அ) ஆடம்பரம் - ஆ) புதுமை -
31. **கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக:**
    அ) அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.
    ஆ) அது ஒரு இனிய பாடல்.
32. **அகராதியைப் பயன்படுத்தி பொருள் எழுதுக:**
    அ) ஆசை - ஆ) அச்சம் -
33. **சேர்த்து எழுதுக:**
    அ) வடக்கு + உண்டு = ...............
    ஆ) எனக்கு + இல்லை = ...............

பகுதி - V

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க: 1x6=6**

34. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்ச்சியைச் சுருக்கி எழுதுக.
35. பாதம் கதையைச் சுருக்கி எழுதுக.

பகுதி - VI

**ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க: 1x6=6**

36. விடுமுறை விண்ணப்பம்
37. 'தேசிய ஒருமைப்பாடு' - என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

# டால்பின் பப்ளிகேசன்ஸ் புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| சென்னை | M.K. ஸ்டோர்ஸ் - 044-25386143, F.A. ஸ்டோர்ஸ் - 97105-68240, M.R. ஸ்டோர்ஸ் - 91766-64596, அராபா புக் டிரேடர் - 044-25987868, கிங்ஸ் புக் ஹவுஸ் - 044-25367660, பிஸ்மி புக் சென்டர் - 044-25380666, லிம்ரா புக் சென்டர் - 99400-39953, பிரின்ஸ் புக் ஹவுஸ் - 044-42053926, நூர் புக் சென்டர் - 81487-23350, பழனிராஜ் - 98414-94023, தாம்பரம் : ஸ்ரீராம் அன் கோ - 044-22266431, ரெட்ஹில்ஸ் : திருமலை புக் சென்டர் - 98411-53261 |
| மதுரை | மனோ புக் சென்டர் - 0452-2621577, ஜெயம் புக் சென்டர் - 0452-2623636, வெற்றி புக் சென்டர் - 98434-61624, M.P.S.S. புக் ஷாப் - 80981-51515, சன்மதி டிரேடர்ஸ் - 97872 61333, மீனாட்சி புக் - 94432 62763, M.V. சதீஸ்குமார் - 98433-49892 |
| கோவை | மெஜெஸ்டிக் புக் ஹவுஸ் - 99943 43334, கண்ணன் புத்தக நிலையம் - 95858 88890, சேரன் புக் ஷாப் - 0422-2396623, முருகன் புக் டிப்போ - 93611-11510, பொள்ளாச்சி ; கலைமகள் ஸ்டோர்ஸ் - 04259-228738, அமிர்தம் பேப்பர் மார்ட் - 98651-03333, அன்னூர் - ஸ்ரீ கார்த்திகேயா ஸ்டோர்ஸ் - 94436 52226 |
| திருச்சி | ராசி பப்ளிகேசன்ஸ் - 0431-2703692, சுமதி பப்ளிகேசன்ஸ் - 0431-2703230, ஸ்ரீ முருகன் புக்சென்டர் - 0431-2703076, காயத்ரி புக் ஹவுஸ் - 97517-87873, ஸ்ரீராகவேந்திரா ஸ்டோர்ஸ் - 97887-57427, துறையூர் : கே.கே.ஆர் ஸ்டோர்ஸ் - 98656-58650 |
| விழுப்புரம் | சபரிநாதன் பிரதர்ஸ் - 04146-222581, புக் பார்க் - 99944-45135 |
| கள்ளக்குறிச்சி | கிருபா ஸ்டேசனரி - 04151-223114, |
| சேலம் | விக்னேஷ் புக் சென்டர் - 0427-4020409, S.V.S புக் ஷாப் - 98659-06262 |
| கடலூர் | பெல் புத்தக நிலையம் - 04142-652252 |
| சிதம்பரம் | வெற்றி புக் சென்டர் - 94432-22648, ஜெயம் புக் சென்டர் - 93630-60516 |
| தஞ்சாவூர் | ஸ்ரீனிவாசா புக் சென்டர் - 94865-25806, முருகன் பப்ளிகேசன்ஸ் - 96779-99905, கும்பகோணம் : ஸ்ரீ மார்கண்டேயா புக் டிப்போ - 0435-2420750, ஒரத்தநாடு: செல்வ விநாயகா பேப்பர், - 99435-57292, R.S.V புக் சென்டர் - 9942968475 |
| திருவண்ணாமலை | பிச்சாண்டி முதலியார் - 94432 14725, K. உதயகுமார் - 94874-09687 |
| வேலூர் | பூமிநாதன் - 93451 72090, வேலூர் புக் சென்டர் - 04162-213250, திருப்பத்தூர் (வேலூர்) : ரவிக்குமார் - 97863 15453 |
| ஈரோடு | செந்தில் புக் பேலஸ் - 04242-214886, தனா புக் கம்பெனி - 99943-71123, செல்வம் புக் சென்டர் - 98431-99697, பள்ளிப்பாளையம் : அம்மன் சஞ்சீவி புக் சென்டர் - 97860-40230, பவானி : தனா புக் சென்டர் - 94862-30921, கோபி : கிராவிட்டி புக் சென்டர்-9385728528 |
| திருவாரூர் | வி. ராமச்சந்திரன் - 94866-86627 |
| ராமநாதபுரம் | ராமநாதசுவாமி புக் ஷாப் - 94434-91772, அருணா நோட் புக் சென்டர் - 98425-37005 |
| சிவகங்கை | நியூ அய்யனார் புக் ஷாப் - 9994079013, காரைக்குடி : ஞானம் புக் சென்டர் 9789886575 |
| கிருஷ்ணகிரி | ஸ்ரீ ரமணா புக் ஹவுஸ் - 90253 13661 |
| திருநெல்வேலி | ஷியாமளா புக் ஷாப் - 94872-44633, சித்ராதேவி புக் சென்டர் - 76676-64293, ஸ்ரீகிருஷ்ணா புக்ஸ் - 98945-55484 |
| திண்டுக்கல் | அய்யனார் புக் சென்டர் - 95008-62024, பழனி : தர்சன் புக் எம்போரியம் - 8667218504 |
| திருப்பூர் | மகேஸ்வரி புக் ஸ்டால் - 94420-04254, சூர்யா பேப்பர் ஸ்டோர்ஸ் - 9994710201 |
| தேனி | மாயா புக்ஸ் & கிப்ட்ஸ் - 94439-29273, K. சுப்புராஜ் - 88703-16922 |
| நாமக்கல் | ஸ்ரீ கணபதி புக் சென்டர் - 70948-07585, திருச்செங்கோடு: சோழா புக் ஹவுஸ்-9842753949 |
| தர்மபுரி | ஸ்ரீ கிருஷ்ணா ஸ்க்ஷல் நீட்ஸ் 9150070034 |
| தூத்துக்குடி | ஸ்ரீ துர்கா ஸ்டோர்ஸ் - 96003-33452, ஈகிள் புக் சென்டர் - 9486688333 |
| புளியங்குடி | ஸ்டூடண்ட் புக் சென்டர் - 79046-69191 |
| விருதுநகர் | சேது புக் சென்டர் - 94864-61400, அருப்புக்கோட்டை : பாலாஜி புக் சென்டர் - 94439-13738 |

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமூகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com    Visit us : www.kalvidolphin.com

**94427 17794**
**63743 17883**